தேதி.06.11.2025

<u>சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்</u>

O.S. No. 145/2020 திரு. பழனிச்சாமி, த/பெ.முத்துசாமி பி.சா.1

<u>பி.சா.1: சத்தியபிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

2ம் பிரதிவாதி என்னுடைய மனைவி என்றால் சரிதான். எனது மனைவியின் சார்பாகவும் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். இவ்வழக்கின் விவரங்கள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். இவ்வழக்கின் வாதி மற்றும் பிரதிவாதிகளின் விலாசங்கள் சரியாகத்தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்தின் வீட்டின் கதவு எண்.4/612 என்றால் கதவு எண். சரியாக தெரியாது. வழக்கு சொத்தில் தான் வாதி குடியிருந்து வருகிறார் என்றால் முதலில் என்னுடைய சுவாதீனத்தில் இருந்தது பின்னர் பூட்டை உடைத்து ஆக்கிரமித்து தற்போது வாதி இருந்து வருகிறார். நான் எப்போதிலிருந்து எந்த தேதி வரை சுவாதீனத்தில் இருந்தேன் என்றால் தேதி சரியாக நினைவில் இல்லை. நான் ஏற்கனவே சுவாதீனத்தில் இருந்து வந்தேன் என்றும், வாதி பூட்டை உடைத்து ஆக்கிரமித்து தற்போது வாதி இருந்து வருகிறார் என்ற விவரத்தை என்னுடைய எதிருரையிலோ, பிரமாண வாக்குமூலத்திலோ சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் சொல்வது தவறு என்றும், நான் ஒருபோதும் சுவாதீனத்தில் ,இருந்தது இல்லை என்றால் சரியல்ல. வாதியை எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் பக்கத்து ஊர்க்காரர் என்பதால் வழக்கு தாக்கல் செய்ததற்கு ஐந்து வருடத்திற்கு முன்னரில் இருந்து தெரியும். எனக்கும் வாதிக்கும் வரவு செலவு உள்ளதா என்றால் இல்லை. எனக்கு என்ன தொழில் என்றால்விவசாயம் மற்றும்

வாழக்காய் வியாபாரம். வாதி என்ன தொழில் செய்து வருகிறார் என்றால் Work shop வைத்துள்ளார். தாவா சொத்தில் தான் வாதி Work shop வைத்துள்ளாரா என்றால் ஆக்கிரமிப்பிற்கு பின்னர் Work shop வைத்துள்ளார். தாவா சொத்தை பொருத்து வாதியும், எனது மனைவியும் 10.04.2019ம் தேதியில் ஒரு கிரைய ஒப்பந்தம் செய்து கொண்டார்களா என்றால் தேதி சரியாக நினைவில் இல்லை. எதற்காக கிரைய ஒப்பந்தம் எழுதப்பட்டது என்றால் வாதி சொத்தை கிரையம் பெறுவதற்காக கிரைய ஒப்பந்தம் எழுதப்பட்டது. கிரையத்தொகை எவ்வளவு என்றால் ரூ.7,50,000/-. கிரைய முன்பணம் எவ்வளவு என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. எவ்வளவு காலக்கெடு என்று அந்த கிரைய ஒப்பந்தத்தில் சொல்லப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கிரைய ஒப்பந்தம் தயார் செய்யும்போது நான் உடன் இருந்தேனா என்றால் இருந்தேன். கிரைய ஒப்பந்தப்படி எனது மனைவி கிரையம் பெற்றுக்கொண்டாரா என்றால் இல்லை. ஏன் எனது மனைவி கிரையம் வாங்கவில்லை என்றால் என் பெயரில் சொத்து வாங்க வேண்டும் என்பதற்காக அந்த பணத்தை எனது மனைவியிடம் வாதி திருப்பி கொடுத்துவிட்டார். பின்னர் நான் அந்த தொகையை வாதிக்கு செலுத்தி எனது பெயரில் கிரையம் செய்து கொண்டேன். என் மனைவியின் பெயரில் உள்ள கிரைய உடன்படிக்கையை 12.10.2015ம் தேதியில் ரத்து செய்துப்பட்டது என்றால் தேதி நினைவில் இல்லை நான் உடன் இருந்தேன். எதன் அடிப்படையில் கிரைய ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டது என்ற வாசகம் குறிப்பிட்டு கிரைய ரத்து பத்திரத்தில் உள்ளதா என்றால் இல்லை. வாதிகளிடம் கிரைய முன் பணம் கொடுத்தற்கு இரசீது ஏதேனும் பெற்றேனா என்றால் இல்லை. ரத்து பத்திரத்தின் ஆவண எண் தெரியுமா என்றால்

தெரியாது. அந்த பத்திரம் எத்தனை மணியளவில் பதிவுசெய்யபட்டதுஎன்றால் மதியத்திற்குள் பதிவு செய்யப்பட்டது. அதே தேதியில் நான் வாதியிடமிருந்து தாவா சொத்தை கிரையம் பெற்றேன் என்றால் சரிதான். நான் வாங்கிய தாவா சொத்தின் கிரைய ஆவண எண் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி கிரைய பத்திரம் எத்தனை மணியளவில் பதிவு செய்யபட்டதுஎன்றால் மதியத்திற்குள் பதிவு செய்யப்பட்டது. மேற்படி கிரையப்பத்திரமும், ரத்து பத்திரமும் ஒரே தேதியில் ஒரே நேரத்தில் தான் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். நான் கந்துவட்டி தொழில் செய்து வருகிறேன் என்றால் இல்லை. நான் எப்போதும் செய்தது இல்லை. நான் கந்துவட்டி தொழில் செய்து வந்தேன் என்றும், வாதி என்னிடம் அவரின் லேத்பட்டறையை மேம்படுத்துவதற்காக என்னிடம் ரூபாய் ஐந்து லட்சம் கடனாக கேட்டார் என்றும், நான் கடன் கொடுக்க சம்மதித்துவிட்டேன் என்றும், கடனுக்கு ஈடாக தாவா சொத்தை அடமானமாகவோ, கிரைய ஒப்பந்தம் செய்தால் கடன் கொடுப்பதாக சொன்னேன் என்றால் அவ்வாறு நான் ஒருபோதும் சொல்லவில்லை. வாதி தன் அவரச தேவைக்காக நான் சொன்ன நிபந்தனையை ஏற்றுக்கொண்டு தாவா சொத்தை பொருத்து கிரைய ஒப்பந்தம் செய்து கொடுத்தார் என்றால் சரியல்ல. ஆனால் நான் கிரைய ஒப்பந்தம் பதிவு செய்வதற்கு பதிலாக தாவா சொத்தை கிரையம் செய்து கொண்டேன் என்றால் சரியல்ல. நான் வாதியை ஏமாற்றி கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாவா சொத்தில் எந்த காலத்திலும் சுவாதீனத்தில் இல்லை என்றும் மேற்படி கிரைய பத்திரம் நடைமுறைக்கு வரவில்லை என்றால் சரியல்ல. மேற்படி கிரைய பத்திரம் நடைமுறைக்கு வராததால் மேற்படி கிரையம் செல்லாது என்றால் சரியல்ல. வழக்கில்

நான் பொய்யாக எதிர்வாதம் செய்து வருகிறேன் என்றும், எனவே வாதி கோரியுள்ளபடி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை இல்லை</u>

திறந்த நீதிமன்றத்தில் என்னால் அழைக்கப்பட்டு சாட்சியிடம் படித்து விளக்கமளித்து, அவர் சரியானவை என்று ஒப்புக் கொண்டு என் முன்பாக கையொப்பம் செய்தார்.

சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.